# மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் காட்டும் இடப்பெயர்கள் - வரலாற்றுப்பார்வை (தெரிவு செய்யப்பட்ட இடங்கள்)

S.K. Shivahaneshan

Senior Lecturer, Dept. of History, Faculty of Arts Culture, EUSL.

**ஆய்வுச்சுருக்கம்**

கிழக்கு பிராந்தியத்தை 'மட்டக்களப்பு தேசம்' என அழைக்கும் வழக்கம் மத்திய காலம் முதல் காணப்பட்டது. மட்டக்களப்பு தேசம் என்னும் போது அது வடக்கே வெருகல் ஆறு முதல் தெற்கே குமணை வரை எல்லைகளைக்கொண்டிருந்தது. மேற்கில் மத்திய மலை நாட்டின் எல்லைப்பகுதிகளையும் உள்ளடக்கி, பரந்து விரிந்த பிரதேசமாகக் காணப்பட்டது. இந்த எல்லைக்குள் மிகபுராதன காலம் முதல் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களின் வரலாற்றை எடுத்துக்கூறும் நூல்தான் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம். மட்டக்களப்பு வரலாற்றைக் காட்டும் நோக்குடையது என்பதனை 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' என்ற அதன் பெயர் உணர்த்துகின்றது.

இந்நூல் மட்டக்களப்பு தேச மக்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம் தொடர்பிலான செய்திகளை புராதன காலம் முதல் கி.பி.18ஆம் நூற்றாண்டு வரை விபரிக்கின்றது. இந்நூலில் பல உள்நாட்டு, வெளிநாட்டு இடப்பெயர்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் தேர்ந்தெடுக்கப்பட்ட இருத்தைந்து இடப்பெயர்கள் பற்றி ஆராய்யப்பட்டுள்ளது. அத்துடன் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் காட்டியுள்ள இடப்பெயர்கள் மற்றும் பிராந்தியத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை ஏனைய இலக்கியங்கள், சாசனங்கள், மரபுக்கதைகள் மற்றும் தொல்லியல் ஆதாரங்கள் ஊடாக ஒப்பியல் ஆய்வு முறையினைப்பயன்படுத்தி ஆராய்ந்து கருத்துக்களை வெளியிடுதல் ஆய்வின் அணுகுமுறையாகும்.

**திறவுச் சொல்**: தேசம், பூர்வீகம், ஒப்பியல், புராதனம்.